# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C.No.56/2020

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 04 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பழனிச்சாமி (அ.சா.7) | தொழில் | : | படம் வரைதல் |
| த/பெ., க/பெ. | : | திரு.ரமணி | வயது | : | 32 |
| கிராமம் | : | ராமநாதநகர் | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 04.11.2024 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1ம் எதிரி முன்னிலையாகியுள்ளனர்.

2ம் எதிரி முன்னிலையாகவில்லை. அதற்கான மனு ஏற்கப்பட்டது.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் பழனி இராமநாதநகரில் குடியிருந்து வாகனங்களுக்கு படம் வரையும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை எந்த தேதி போட்டேன் என்று தேதி ஞாபகமில்லை. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு குறும்பர் மடம் அருகில் சென்றபோது போலீசார் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். எதற்கு என்று கேட்டேன். சாட்சிக்காக என்று சொல்லி கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அந்த தாளில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2.

(சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி அரசு தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டதை ஏற்றுக்கொண்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–** கடந்த 04.04.2018 ம் தேதியன்று மாலை 5.00 மணிக்கு சொந்த வேலையாக நானும் குறும்பர் தெருவை சேர்ந்த தர்மலிங்கம் என்பவரும் குறும்பர் மடம் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது பழனி நகர் காவல் ஆய்வாளர் பழனி அடிவாரம் காவல்நிலைய குற்ற எண்.70/2018 என்ற வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு அதை எங்களுக்கு காண்பித்து விளக்கம் சொல்லி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் மேற்படி தர்மலிங்கம் என்பவரும் சாட்சி கையெழுத்திட்டோம் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை :–</u>** இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.11.04 19:11:01 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.